வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 30.01.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 30 | பக்கங்கள் : 08




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram. money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழ் சமூகங்களுக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

## மனோ கணேசன் எம். பி. தெரிவிப்பு

**மலையக சமூகம்மீதான ஓரங்கட்டலை டித்வா பேரிடர் வெளிப்படுத்தியுள்ளது**



கொழும்பு, ஜனவரி 30

"காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அதிகார பகிர்வு காணாமல் போனோர் பற்றிய பணிமனையின் மேம்பட்ட செயல்பாடு போன்றவை தொடர்பில் வடக்கு தமிழ் மக்களுக்கு வழங்கிய முக்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை", என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் மலையக தமிழ் சமூகம் நீண்டகாலமாக ஓரங்கட்டப்படுவதை டித்வா பேரிடர் வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐ. நா. வதிவிட பிரதிநிதி மார்க் அந்த்ரே பிரான்லேயுடனான சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

07

## மகள் குப்பைக்கு மூட்டிய தீயால் காயமடைந்த தாய் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 30

மகள் குப்பைக்கு மூட்டிய தீ வீட்டுக்கு பரவியதில் காயமடைந்த தாய் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக் கிழமை உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் - அரியாலையை சேர்ந்த பரமசிவம் பரமேஸ்வரி (வயது 81) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு,

உயிரிழந்தவர் தனது மகளுடன் வசித்து வந்துள்ளார். கடந்த 17ஆம் திகதி மகள் வீட்டுக்கு அருகே குப்பைக்கு தீ வைத்துள்ளார். அந்தச் சமயம் அவரின் தாயார் அறையில் உறங்கிக் கொண்டிருந்தால் வீட்டை பூட்டிவிட்டு கடைக்கு சென்றுள்ளார்.

இந்த நிலையில், வீட்டினருகே குப்பைக்கு வைக்கப்பட்ட நெருப்பு யன்னலிலும் அதில் கட்டப்பட்டிருந்த கொடியில் போடப்பட்ட ஆடைகளிலும் - வீட்டின் கூரை மரங்களிலும் பரவியது. அத்துடன், உறங்கிக் கொண்டிருந்த மூதாட்டிமீதும் தீ பற்றியது.

மூதாட்டியின் அபயக்குரல் கேட்டு அருகிலுள்ள வீட்டில் வசித்த அவரின் மற்றைய மகள் அவரை காப்பாற்றி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்தார்.

07

## இலங்கை வருகின்றார் ஐ. எம். எவ். பணிப்பாளர்

கொழும்பு, ஜன. 30

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா சிறீநிவாசன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை நேற்று முன்தினம் ஐ. எம். எவ். பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். இதன்போதே அவர் மேற்கண்ட

07

## - கிவுல் ஓயா திட்டத்துக்கு - எதிரான போராட்டத்தில் சகலரும் திரளவேண்டும்

### தமிழ் அரசு கட்சி அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை நெடுங்கேணியில் நடைபெறவுள்ள போராட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மக்கள் திரளாக வந்து பங்கேற்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சி அழைப்பு

07

## அர்ச்சுனா எம்.பிக்கு மிரட்டல்; 6 சந்தேகநபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜன. 30

தொலைபேசி மூலம் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பான குற்றச்சாட்டில் நீதிமன்றில் முன்னிலையான 3 பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆறு பேரை மல்லாகம் நீதிமன்று நேற்று பிணையில் விடுவித்தது.

கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களான வரதராசா தனகோபி, சிவரூபன் லதீந்தன், மனோகரன் பிரதீபன் ஆகிய மூவர் உட்பட ஆறு பேர் தன்னை

07

## மாகாண சபைகள் தேர்தல், புதிய அரசமைப்பு விரைவில்

### ஆளும் கட்சி சொல்கிறது



மட்டக்களப்பு, ஜன. 30

"புதிய அரசமைப்பு, மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு விரைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்", என்று ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

07

## தொடரும் வேலை நிறுத்தம் நோயாளர்கள் பெரும் அவதி

கொழும்பு, ஜன. 30

மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பால் நான்காவது நாளாகவும் நேற்று வியாழக்கிழமை அரச மருத்துவ மனைகளில் சேவைகள் வழங்கப்படவில்லை. இந்த நடவடிக்கையால் நோயாளர்கள் பலரும் அவதியுறுகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. அவசர சேவைகள் வழங்கப்படுகிறபோதிலும் தினசரி

07

## 100 புற்றுநோயாளர்கள் தினசரி அடையாளம்!

கொழும்பு, ஜன. 30

நாட்டில் தினசரி 100 புற்றுநோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர். இவர்களில், சுமார் 40 பேர் உயிரிழக்கின்றனர் என்று தேசிய புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் சமூக மருத்துவ நிபுணர்

07

## மின் வேலியில் சிக்கியவரும் காப்பாற்ற முயன்றவரும் பலி

### மட்டக்களப்பில் நேற்று துயரம்

மட்டக்களப்பு, ஜன.30

யானைக்கு அமைக்கப்பட்ட மின்வேலியில் சிக்கிய வரும் அவரை காப்பாற்ற முயன்றவரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு - ஏறாவூர்பற்று- பன்குடாவெளி - புலையவெளியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான செல்வம் கர்ணன் (வயது 48),

07

## ஆடை ஏற்றுமதி 5.42 வீதம் வளர்ச்சி

கொழும்பு, ஜன. 30

2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, டிசெம்பர் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் 2024 ஆம் ஆண்டு டிசெம்பர்

07

## பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ரூ. 1750 நாளாந்த வேதனம் ஒப்பந்தம் இன்று கைச்சாத்து

கொழும்பு, ஜன. 30

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தம் இன்று வெள்ளிக் கிழமை கைச்சாத்தாகும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இது தொடர்பான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

07

## பளை விபத்தில் பெண் மரணம்!

கிளிநொச்சி, ஜன. 30

மோட்டார் சைக்கிளை டிப்பர் வாகனம் மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

ஏ- வீதி, பளை நகரப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் பச்சிலைப்பள்ளி - சோரன் பற்றைச் சேர்ந்த குமாரசாமி

07

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை சேனாதிராசாவின் திருவுருவ சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பெருந்தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் திருவுருவச் சிலை திறப்பு விழாவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

திருவுருவச் சிலை திறப்பு விழா காலை 9 மணிக்கு மாவிட்டபுரத்தில் நடைபெறும்.

தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு நினைவஞ்சலி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் ந. நல்லுசாமி, யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி ஆகியோர் பங்கேற்பர்.

இந்த நிகழ்வுகளில் மாவை சோ. சேனாதிராசா முதலாமாண்டு நினைவு மலர், ஈழ அண்ணல் மாவை. சோ. சேனாதிராசா ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

# மன்னார் நீதிமன்ற வளாகம் அருகே மூடப்பட்டிருந்த வீதி மக்கள் பாவனைக்கு


மன்னார், ஜன. 30

மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த வீதி மன்னார் நகர சபையால் செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

1983-1984ஆம் ஆண்டு வரை மக்கள் பயன்பாட்டில் இருந்த குறித்த வீதியானது நீண்ட கால மாக மக்கள் பயன்பாடின்றி மூடப்பட்டிருந்தது.

இந்த வீதி மூடப்பட்ட காலப்பகுதியில் இராணுவ சோதனை சாவடி உட்பட பல்வேறு இரா ணுவ சோதனை மற்றும் பாஸ் வழங்கும் பணிமனைகள் அந்தப் பகுதியில் செயல்பட்டு வந்தது.

அதன் பின்னர் நீதிமன்ற கட்டுக்காவல் பொருட்கள் சேமிக்கப்பட்டு வந்ததோடு, பயன்படுத்த முடியாமல் காணப்பட்ட நிலையில் குறித்த வீதி, அதைச் சூழ உள்ள பகுதிகள் நகர சபையால் சுத்தம் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலை கால்கோள்விழா



வடமராட்சி, ஜன. 30

வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலையின் கால்கோள் விழா நேற்று வியாழக்கிழமை பாடசாலை அதிபர் பா. யசிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்திரனாக ஓய்வு பெற்ற கல்வியாளர் கனகர் இரத்தினம் கமலநாதன் கலந்து கொண் டார்.

முதன்முதலில் பாடசாலைக்கு காலடி எடுத்துவைக்கும் நாள் மாணவர்களின் நினைவில் பதியக்கூடியதாக இந்த கால் கோள் விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முதலாம் தரத்தில் இணையும் மாணவர்களை 2ஆம் தர மாணவர்கள் வரவேற்றனர். அத்துடன், கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ-02-03-05)

# முத்தமிழ் பெருவிழாவில் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 30

"குரலோசை" நுண்கலைகளின் தாயகம் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் முத்தமிழ் பெருவிழா நாளை சனிக்கிழமை முதல் தொடர்ச்சியாக 4 நாட்கள் நடைபெறவுள்ளது.

நான்கு நாட்களும் மாலை 5 மணி முதல் 8 மணி வரை முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இயலிசைவாரிதி ந. வீரமணி ஐயர் அரங்கில் நடைபெறும்.

சந்தக் கவிஞர் தவ. தஜேந்திரன் தலைமையில் முதல் நாளான நாளை சனிக்கிழமை நடக்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு. திருமுருகன் கலந்துகொள்கிறார்.

இதில், பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலைமன்ற மாணவர்களின் குழு இசை, தனி இசை, சித்தாஹாஸ் நடன நிறுவன மாணவர்களின் பரத நிகழ்வு, நட்டுவாங்கம் போன்ற நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (ஐ)

# 'மறுபக்கம் ' திரைப்பட காட்சி

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாண திரைப்படக் கழகத்தின் 23ஆவது திரைப்படக்காட்சியாக "மறுபக்கம்" என்ற தமிழ் திரைப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3.30 மணிக்கு இல. 18/2, அம்மன் வீதியிலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படவுள்ளது.

இந்திய தேசிய திரைப்பட விருது பெற்ற "மறுபக்கம்" என்ற எண்பது நிமிட நேரம் காட்சிப்படுத்தக் கூடிய இந்தத் திரைப்படம் 1990 களில் வெளிவந்து பலரின் பாராட்டைப் பெற்றது. அதனை கே. எஸ். சேதுமாதவன் நெறியாள்கை செய்திருக்கிறார். (ஐ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 30

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை மாவைகலட்டி நாக தம்பிரான் ஆலயத்தில் வாராந்த சொற்பொழிவு நடைபெறுகிற.

42ஆவது தொடராக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் சொற்பொழிவில் பரஞ்சோதி முனிவர் குருபூசையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வு நடைபெறும். இதைத் தொடர்ந்து, சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் "தருமிக்குப் பொற்கிளியருளிய படலம்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

# கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஜன. 30

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அருள்மிகு சிறீ பத்திரகாளியம்மன் ஆலய கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக் கிழமை காலை 07.30 மணி தொடக்கம் 08.06 மணி வரையான சுபவேளையில்நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கான கர்மாரம்பம் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. ஆலயத்தின் ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான சிவசிறீ சோமஸ்கந்த தனஞ்சய குருக்கள் பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார். (ஐ-02)

* * * *

வடமராட்சி, ஜன. 30

பருத்தித்துறை வியாபாரி மூலை அருள்மிகு பத்திரகாளியம்பாள் சமேத சிறீ ஆதிசிவ வீரபத்திரர் கோயிலின் மகா கும்பாபிஷேகம்நாளை மறுதினம்ஞாயிறுக்கிழமை காலை 07.45 மணி முதல் 08.50 மணி வரையிலான சுப வேளையில்நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கர்மாரம்ப கிரியைகள் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் நாளை சனிக்கிழமை காலை 08.00 மணி முதல் மாலை 05 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தமுடியும்.

நெல்லியடி தடங்கல் முருக மூர்த்தி ஆலய பிரதம குருக்கள் பிரம்மசிறீ நா. ரங்க சாமி குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஐ-02)

# நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜன. 30

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி அமரர் தம்பித்துரை முத்துக்குமாரசாமியின் நினைவேந்தல் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட அமரர்த. முத்துக்குமாரசாமி கடந்த 20ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க்கில் இயற்கை எய்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 30

மக்கள் கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் புத்தக அரங்க விழாவின் 29ஆவது நிகழ்வு இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பாவலர் துரையப்பாப்பிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில், நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்வில் ஈழத்து நூல்களை அறிவோம் என்ற தலைப்பிலான புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் மக்கள் கலை இலக் கிய பேரவையின் தலைவர் த. சிறீ பிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை மாவை வரோதயனின் "குருதி படிந்த தேசம்" கவிதை தொகுப்பு நூல் பற்றி இளம் ஆய்வா ளர் க. ஹாயத்திரி, சுதராஜின் "கப்பல் கடல் வீடு தேசம்" நாவல் தொடர் பாக ஆசிரியர் காந்திமதி கணேசராசா, தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோவின் "பசுமை எனும் பேரபாயம் "கட்டுரை தொகுப்பு பற்றி ஆசிரியர் க. தவசீலன், சோ.தேவராஜாவின் "வியர் வைத் துளிகள்" கவிதைத் தொகுப்பு பற்றி ஆய்வாளர் சி. விமலன் ஆகியோ ரும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு சண் நாடகக் குழுவின் தயாரிப்பில், பு. கணேசராஜாவின் நெறியாள்கையில் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் நேரகாலம் மற்றும் வீட்டுக்காரன் ஆகிய நாடகங்கள் அரங்கேறும்.

மேலும், இந் நிகழ்வின் விசேட அம்சமாக புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சந்தேகத்தின் பேரில் 517 பேர் கைது!

கொழும்பு, ஜன. 30

நாடளாவிய ரீதியில் பொலிஸார் நேற்று முன் தினம் முன்னெடுத்த விசேட சுற்றிவளைப்பில் 517 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்புக்காக பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையின் நாளாந்த அறிக்கையை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக, பொலிஸ் பிரிவுகள் மட்டத்தில் அனைத்து பிரதேச பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த விசேட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

அதற்கமைய, நேற்று முன் தினம் பொலிஸாரால் 29,563 பேர் சோதனையிடப்பட்டதுடன், இதன்போது சந்தேகத்தின் பேரில் 517 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த நடவடிக்கையின் போது, குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய வர்களாக அடையாளம் காணப்பட்ட 21 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 332 பேரும், திறந்த பிடியாணை கொண்ட 169 பேரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 399 பேரும், கவனயீனமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 62 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வேறு போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பில் 4,640 பேரும் இதன்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.01.2026 வெள்ளிக்கிழமை

விசுவாவசு வருடம், தை 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

# தமிழ் பகுதிகளின் அபிவிருத்தி

“வடக்கை போன்று வளம் கொண்ட மாகாணம் இலங்கையில் வேறில்லை - ஆனாலும் இரண்டு மாவட்டங்கள் வறுமையில் முன்னிலை வகிக்கின்றன”, என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் குறிப்பிட்டிருக்கிறார். முதலில் வடக்கைப் போன்று வளமான மாகாணம் ஏன் தொடர்ந்தும் அபிவிருத்தியில் பின்தங்கியிருக்கிறது என்பதற்கான காரணத்தையல்லவா கண்டுபிடிக்க வேண்டும். வடக்கு மாகாணம் வளமான மாகாணமாக இருந்தாலும் இலங்கையின் அபிவிருத்தி மையமாக மேற்கு மாகாணம்தான் இருக்கிறது. இந்த நிலைமை ஏன்? உண்மையிலேயே வடக்கு வளமான மாகாணம் என்றால் அதுதானே இலங்கையின் அபிவிருத்தியின் மையமாக இருந்திருக்க வேண்டும்!


வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கும் அதிகார பகிர்வுக்கும் பிரிக்க முடியாத தொடர்பு உண்டு. இந்தப் பின்புலத்தில்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வறுமை நிலையை உற்றுநோக்க வேண்டும். வடக்கு, கிழக்குக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தீர்மானிக்கும் இறுதி இடமாக மேற்கு மாகாணம் இருக்கிறது. இந்த நிலைமை தொடரும் வரையில் வடக்கு மாகாணம் அபிவிருத்தியில் தன்னிறைவை அடையவே முடியாது.

இந்தப் பின்புலத்தில்தான் மாகாண சபைகள் தேர்தல் இன்றியமையாத விடயமாக இருக்கிறது. மாகாண சபைக்கான தேர்தல் என்பது ஒருபுறம் அரசியலாக இருக்கின்றபோது மறுபுறம் தமிழ் பகுதிகளின் அபிவிருத்திக்கான அடித்தளமாகவும் இருக்கிறது. ஏனெனில், அரசியல் அதிகாரமின்றி ஒரு குறிப்பிட்ட பகுதியை அபிவிருத்தி செய்ய முடியாது. பல வருடங்களாக தேர்தல் இல்லாத மாகாண சபையாகவே காலம் கழிகிறது.

தேசிய மக்கள் சக்தி ஒரு புதிய வகை ஆட்சியை நடத்தப் போவதாகக் கூறினாலும்கூட, தமிழ் பகுதிகளின் அபிவிருத்தியில் முன்னேற்றகரமான அணுகுமுறைகளை இதுவரையில் காணவில்லை. இந்திய அரசு உதவி செய்வதாகக் கூறியும் காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலைய புனரமைப்பு நடவடிக்கைகள் ஆமை வேகத்திலேயே நகர்கின்றன. மேற்படி இரண்டு திட்டங்களும் வடக்கு மாகாண மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்றக் கூடியவவை.

இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் இந்தியாவால் மேற்கொள்ளப்படவுள்ள பெரும் முதலீடுகள் கிழக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையாதது. மாகாண சபை நிர்வாகமும் இருக்கின்றபோது இந்த விடயத்தில் துரித வளர்ச்சியை அடைய முடியும். ஆனால், அரசியல் அதிகாரமின்றி எதுவும் நடக்காது. எனவே, தமிழர் பகுதிகள் அபிவிருத்தியில் பின்தங்கியிருக்கின்றன என்றால் அதற்கான முழுக்காரணமும் அரசியல் அதிகாரமின்மையில்தான் தங்கியிருக்கிறது. வேதநாயகன் போன்ற அதிகாரிகள் நல்லநோக்கில் பேசலாம். ஆனால், அபிவிருத்திக்கு இனிமையான வார்த்தைகள் மட்டும் போதாது. அரசியல் அதிகாரம் தேவை.

புலம்பெயர் தமிழர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றனர் என்றும் அண்மையில் வேதநாயகன் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவ்வாறான முனைப்பு புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை - அதற்கும் அரசியல்தான் காரணம். ஏனெனில், தங்கள் முதலீடுகளை தமிழ் பகுதிகளில் பாதுகாக்கக் கூடிய வல்லமை தமிழ் அரசியல் தலைமைகளிடம் இருக்கிறது என்று கருதினால்தான் புலம்பெயர்ந்தோர் மத்தியில் முதலீட்டுக்கான நம்பிக்கை ஏற்படும்.



# அகிம்சை மூலம் போர் செய்த மகாத்மா!

**மகாத்மா காந்தி அடிகளின் 78ஆவது சிரார்த்த தினம் இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

*“சத்தியம்” என்ற சொல்லின் இலக்கணமாக வாழ்ந்த மகாத்மா காந்தி 1948 ஜனவரி 30ஆம் திகதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கல்நெஞ்சம் கொண்ட நாதுராம் விநாயக கோட்சே என்ற இந்து தீவிரவா தியால் சுட்டுக் கொல்லப்பட்டார். எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற அன்பு நெஞ்சம் கொண்ட காந்தியடிகள் “ராம் ராம்” என்ற உச்சரிப்போடு உயிர் துறந்தார். காந்திஜியின் மறைவை ஜீரணிக்க முடியாத மக்கள் திணறினார்கள். அவர் இறக்கும்போது இந்தியா சுதந்திரம் அடைந்து ஆறு மாதம் கூட முடிவடைந்து இருக்கவில்லை.*

*மிகவும் சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழ்ந்தவர் காந்தி. அவர் இந்தியாவின் விடுதலைப் போராட்ட சரித்திரத்திலே முக்கியமான கதாநாயகன் ஆவார்.*

*காந்தி, அந்நியரின் ஆட்சியில் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடந்த பாரத தேசத்தை அதன் விடுதலை வேகத்தை அதிகரித்து - பாரத அன்னையின் அடிமை விலங்கு ஒடிக்கவும் - நாட்டின் விடுதலைக்காக உழைத்ததோடு சமூகத்தில் நல்ல விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தினார்.*

*இந்திய சுதந்திர போராட்டத்தில் அகிம்சையைத் தனது ஆயுதமாக எடுத்து போர்க் கொடி உயர்த்திய காந்தி 1869 ஒக்ரோபர் 2ஆம் திகதி குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். தனது பன்னிரண்டாவது வயதில் பார்த்த அரிச்சந்திர நாடகமே இவரை மிகவும் கவர்ந்து சத்தியசீலராக விளங்கச் செய்தது. தனது பதினெட்டாவது வயதில் பரிஷ்டர் (சட்டக் கல்வி) படிப்பதற்காக இங்கிலாந்து சென்றார்.1893ஆம் ஆண்டு ஆபிரிக்காவுக்கு பயணமானார். அங்கு “நேட்டால் இந்தியர் காங்கிரஸ்” என்ற அமைப்பை ஸ்தாபித்து தேசிய சுயமரியாதைக்கான போராட்டத்தை ஆரம்பித்தார். இந்தியர்கள் படும் துயரங்களைத் தாமே அனுபவித்த காந்தி 1914ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார்.*

*சுதந்திர போராட்டத்தை அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு ஆரம்பித்து நாட்டின் விடுதலைக்காக உழைத்தார். கல்வியில் சீர்திருத்தங்கள் வேண்டும் எனக் கூறினார். தீண்டாமை ஒழிப்பை ஆதரித்து பல இடங்களுக்கு கால் நடையாக சென்று மக்களை பண்படுத்தினார். சகல மக்களுக்கும் ஆலயம் பொதுச்சொத்து ஒருவரையும் தள்ளி வைக்கக் கூடாது என்று ஆலய பிரவேசம் செய்தார். கை ராட்டினத்தை சுழற்றினார் - கதர் ஆடையை அணிந்தார்.*

*1917இல் காந்தியின் சத்தியாக்கிரக போராட்டம் நடைபெற்றபோது பல இந்தியர்கள் காந்தியின் பக்கம் சாய்ந்தனர். முழு பாரதமும் காந்தியின் பக்கம் திசை திரும்பியதால் வெள்ளையர்கள் செய்வதறியாது திகைத்தனர். அவர் உப்பு சத்தியாக்கிரகம் செய்தபோது சென்ற இடமெல்லாம் மக்கள் பொன்னும் பணமும் அள்ளிக் கொடுத்தனர்.*


*அந்நியரை ஆயுதத்தால் தாக்காது அகிம்சை வழியிலே வெளியேற்றிய பெருமை காந்தி அடிகளுக்கு உரியது. அவர் பல முறை சிறை சென்ற காலத்தில் சிறையிலேயே தனது சுயசரிதமாகிய “சத்திய சோதனை”யை எழுதினார். அந்நியரின் ஆட்சியில் அகப்பட்டு அல்லலுற்ற பாரத மாதாவின் அடிமை தளையை அகற்றப் போராடிய அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தியின் அயராத முயற்சியால் 1947 ஓகஸ்ட் 15 ஆம் திகதி பாரதம் சுதந்திரம் பெற்றது. அதற்கு அடுத்த வருடம் அதாவது, 1948 ஆம் ஆண்டு எமது இலங்கைத் திருநாடும் சுதந்திரம் பெற்றமை அவருடைய போராட்டத்தால் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.*

*உண்மையும் நேர்மையும் இருந்தால் எதிலும் நாம் வெல்லலாம் என்பதை மகாத்மா காந்தியினுடைய வரலாறு எங்களுக்கு பறைசாற்றி நிற்கிறது. சுதந்திர போராட்ட காலத்தில் வாழ்ந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை வரிகளை நினைவூட்டுவது அவருடைய சிரார்த்த தினமாகிய இன்றைய நாளில் மிகவும் பெறுமதியான ஒன்றாகும்.*

**வாழ்க நீ எம்மான் இந்த**
**வையத்து**
**நாட்டிலெல்லாம்**
**தாழ்வுற்று வறுமை மிஞ்சி**
**விடுதலை தவறிக்கெட்டு**
**பாழ்பட்டு நின்ற தாமோர்**
**பாரத தேசந்தன்னை**
**வாழ்விக்க வந்த காந்தி**
**மகாத்மா நீ வாழ்க!**
**வாழ்க!.**

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி,**
**ஆசிரியர் “காந்தீயம்”**

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். ஆடை ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். எதிலும் நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். இனிமையான நாள்.

**சிம்மம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். தடைகள் ஏற்படும்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள். வெற்றி கிடைக்கும் நாள்.

**தனுசு**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை அரசால் அனுகூலம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மீனம்**
குடும்பத்தினரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# நயினாதீவு, வேலணை பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 30

நயினாதீவு, வேலணை பிரதேச அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இந்தியத் துணைத் தூதரகத்தில் கலந்துரையாடப் பட்டுள்ளன.


பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஒழுங்குபடுத்தலில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியுடன் வேலணை பிரதேச சபை தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அலுவலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.




இந்தக் கலந்துரையாடலில் இந்திய இழுவைப்படகு மீனவர்களால் நயினாதீவு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், நயினாதீவில் தற்சமயம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூரியகல மின் உற்பத்தி தொடர்பான விடயங்கள், அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திகள் மற்றும் வேலணை பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார், வேலணை பிரதேச சபையின் உப தவிசாளர் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான செல்லப்பா பார்த்தீபன், மங்களேஸ்வரன் கார்த்தீபன், நயினாதீவு கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் மற்றும் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர். (எ-03)

# சிறீதரன் எம். பியுடன் கனடா தூதுவர் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கைக்கான புதிய கனடா தூதுவர் இஸபெல்லா மார்ட்டின், தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, போரின் பின்னர் தமிழர் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள புதிய விகாரைகள், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான சில விடயங்களை ஆவணங்களுடன் கனடா தூதுவருக்கு சிறீதரன் எம்.பி. தெளிவுபடுத்தியுள்ளார். (எ)

## தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இராமநாதன் அர்ச்சுனா, தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரான்சிஸ் சந்திரா சத்தியசோதி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை தடுத்தல், நாவற்குழி சிங்கள வீட்டுத்திட்டம், பிரதேச சபையால் அனுமதியின்றி விவசாய நிலப் பிரதேசங்களில் கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பிலும், பொருளாதார மத்திய நிலையத்தை மீளவும் குத்தகைக்கு விடுவது தொடர்பிலும் ஆராயப்பட்டன. (எ-03)

# “தமிழ் அரசு கட்சிக்குள் உளவாளிகள் ஊடுருவல்”

வவுனியா, ஜன. 30

தமிழ் அரசுக் கட்சியின் இறுதிப் பொதுக்குழு கூட்டப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எமது கட்சியிலேயே இல்லை. தற்போது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் கீழ் உளவாளிகள் கூட்டம் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவுக்குள் உள்நுழைக்கப்பட்டுள்ளனர் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவில் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனின் ஆதரவாளர்கள் தான் அதிகம் உள்ளனர். அவர்களால் புகுத்தப்பட்டவர்கள் தான் அங்கே அதிகம் உள்ளனர். சாணக்கியன் எம்.பி. எப்படி உள்வாங்கப்பட்டவர் என்று தெரியாமல் உள்வாங்கப்பட்டு விட்டார்.

உண்மையில் இறுதிப் பொதுக்குழு கூடிய போது சாணக்கியன் எமது கட்சியில் இல்லை. எப்படி அரசியல் குழுவில் உள்வாங்கப்பட்டார் என்பது எனக்குத் தெரியாது. அது மர்மமாகவே இருக்கிறது. இது உளவாளிகளின் ஊடுருவல்”- என்றார். (எ-10)

# இணுவில் இந்து கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 30

இணுவில் இந்துக் கல்லூரியில் தரம் ஒன்றில் இணையும் மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் 16, 000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இணுவில் பொது நூலக இணுவில் - கனடா அமைப்புக்குழுவின் ஏற்பாட்டில் இணுவில் பொது நூலக தகவல் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இணுவில் பொது நூலக போசகர் இரா. அருட்செல்வம், இணுவில் இந்து கல்லூரி பிரதி அதிபர் மிருளாயினி சிவராம கிருஷ்ணனிடம் கற்றல் உபகரணங்களை கையளித்தார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு வரைவுக்கு பல் தரப்பு செயலணி அவசியம்

## ஜனாதிபதிக்கு சட்டவல்லுநர்கள் முன்மொழிவு

கொழும்பு, ஜன. 30

இலங்கைக்கான புதிய அரசியலமைப்பை வெற்றிகரமாக உருவாக்குவதற்காக, அரச அதிகாரிகளுடன் இணைந்து அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல் தரப்பு செயலணியொன்றை அமைக்கவேண்டும் என சட்ட வல்லுநர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் குழுவொன்று ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்துள்ளது.

சட்டத்தரணி லால் விஜேநாயக்க,பேராசிரியர் பிரியங்க துனுசிங்க,கலாநிதி அதுலசிறி சமரகோன், சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே, சட்டத்தரணி விரஞ்ஞன ஹேரத், சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம தஸநாயக்க, சட்டத்தரணி ஏ.எம். பாயிஸ்,சட்டத்தரணி ஷிரால் லக்திலக, பேராசிரியர் சரித ஹேரத்,சட்டத்தரணி நிமல்கா பெர்னாண்டோ, கருணாரத்ன பரணவிதாரன, சட்டத்தரணி சமன் சேனாதீர,சட்டத்தரணி ஜகன ரணதுங்க ஆகியோர் அடங்கிய குழுவினரே ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். 1995-2000 மற்றும் 2015, 2018 காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு முயற்சிகளின் அனுபவங்களை கருத்தில் கொண்டு, சமூக - அரசியல் சூழலுக்கு ஏற்ற சீர்திருத்த மாதிரியை பின்பற்ற வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் அனைவரையும் உள்ளடக்கிய விரிவான மக்கள் ஆலோசனை செயல்முறை, மக்கள் தீர்ப்பின் மூலம் அரசியலமைப்பு கோட்பாடுகளுக்கு அங்கீகாரம், அரசியல் கட்சிகள், சிவில் சமூகம், சட்ட வல்லுநர்கள் உள்ளிட்டோர் பங்குபற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறிமுறை ஆகியவை அவசியம் என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 1978 அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் மக்கள் தீர்ப்பு மூலம் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றும் செயன்முறையை பின்பற்ற வேண்டும் என்றும், அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" கொள்கைக்கு அமைய புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# கடற்படை சிப்பாய் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 30

அமெரிக்க கடற்படையின் 'நேவி சீல்' பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த முதல் இலங்கை கடற்படை வீரரான லெப்டினன்ட் கொயான் சமித்த உயிரிழந்துள்ளார்.

இவர் தனது 28 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

இலங்கை கடற்படை வீரரான லெப்டினன்ட் கொயான் சமித்த, வெலிசறை கடற்படை முகாமில் உள்ள கடற்படை விடுதியில் சடலமாக மீட்கப்பட்டதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

இவர் கடந்த 2025 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற அமெரிக்க கடற்படையின் 'நேவி சீல்' பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து மீண்டும் தனது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

அமெரிக்கக் கடற்படையின் விசேட பயிற்சியை முடித்த முதல் இலங்கையர் என்ற பெருமை இவரைச் சாரும்.

இலங்கை கடற்படை வீரரான லெப்டினன்ட் கொயான் சமித்தவின் மரணத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இது தொடர்பில் பொலிஸார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்ணை கொலை செய்தவர் உயிரை மாய்ப்பதற்கு முயற்சி!

கொழும்பு, ஜன. 30

பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்த நபர் தனது கழுத்தை அறுத்து உயிர் மாய்க்க முயன்ற நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிபில பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த 40 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணை படுகொலை செய்த நபரும் தனது உயிரை மாய்க்கும் நோக்குடன் கழுத்தில் வெட்டிய நிலையில் மீட்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இருவருக்கும் இடையில் தகாத உறவு இருந்ததாகவும் , உறவு நிலைக்குள் முரண்பாடு ஏற்பட்டதை அடுத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பில் பிபில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கை, கால் கட்டப்பட்டு ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன. 30

அநுராதபுரம் - இராஜாங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் தூக்கில் தொங்கிய நிலையில், ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர், இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் கை, கால்கள் கட்டப்பட்டு தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதால் இந்த சம்பவம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இராஜாங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வீடொன்று தீப்பற்றி எரிந்ததில் முதியவர் பரிதாபமாக மரணம்!

கொழும்பு, ஜன. 30

வெயங்கொடை - பத்தலகெதர பகுதியில், வீடொன்றில் நேற்று வியாழக்கிழமை அதிகாலையில் தீ பரவலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தீக்காயங்களுக்குள்ளான முதியவர் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மொரட்டுவத்த, பத்தலகெதர பகுதியைச் சேர்ந்த 73 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ பரவல் ஏற்பட்டபோது முதியவர் வீட்டில் தனியாக இருந்துள்ளதாகவும், தீ பரவலுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் வேயங்கொடை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பாணை

கொழும்பு, ஜன. 30

பொலிஸ்மா அதிபர் மற்றும் நான்கு சிரேஷ்ட காவல்துறை அதிகாரிகளுக்கு, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரத்தினபுரி அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பான விசாரணைக்காகவே அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். பொலிஸ்மா அதிபர், இரத்தினபுரி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், எம்பிலிபிட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், எம்பிலிபிட்டிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் எம்பிலிபிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சூரியகந்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி, தற்போது பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஹெட்டியாராச்சிகே சுசந்த வீரசிங்க என்பவரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே குறித்த உத்தியோகத்தர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள், தனது அரசியலமைப்பு ரீதியான அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்:

# 4 தேரர்கள் உட்பட 10 பேரின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

திருகோணமலை, ஜன. 30

திருகோணமலை கோட்டை வீதி, டச்பே கடற்கரையில் சட்டவிரோத நிர்மாணம் ஒன்றை அமைத்தமை, அதில் புத்தர் சிலை ஒன்றை வைத்தமை ஆகிய குற்றங்களை புரிந்தார்கள் என்று குற்றம்சாட்டப்பட்டிருந்த பலாங்கொட கஸ்ஸப தேரர் மற்றும் பௌத்த பிக்குகள் மூன்று பேர் உட்பட 10 பேரின் விளக்கமறியல் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை திருகோணமலை நீதிவான் நீதிமன்ற பிரதான நீதிபதி சம்சுடீன் நேற்று முன்தினம் புதன்கிழமை பிறப்பித்தார்.

இந்த வழக்கு புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிரதிவாதிகளான பௌத்த பிக்குகள் உட்பட 10 பேர் சார்பில் முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான உதய கம்பன்பிலவும் மேலும் 5 சட்டத்தரணிகளும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரம் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து இரு தரப்பினரது வாதங்களை செவிமடுத்த நீதிபதி வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதிக்கு தவணையிட்டு, விளக்கமறியலை நீடித்தார்.

பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் பிரதிவாதிகளுக்கு பிணை வழங்குமாறு கோரினர். இதனை பொலிஸ் தரப்பும், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் அபிவிருத்தி திணைக்கள தரப்பினரும் ஆட்சேபித்தனர். இதனையடுத்து மன்று பிணைக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதேவேளை, தமது தரப்பினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்குக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் வழக்கின் குரல் பதிவுகள், எழுத்துபூர்வ அறிக்கைகள் தேவையாக உள்ளது என பிரதிவாதி தரப்பினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவற்றை வழங்க முடியும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (எ)

# அம்பாறையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



நிந்தவூர், ஜன. 30

பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தலைமையில் அம்பாறை மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று நிந்தவூர் மர்ஹூம் அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கல்வி வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ)

# அபிவிருத்தி திட்டங்கள் பற்றி மூதூரில் விரிவாக ஆராய்வு



திருகோணமலை, ஜன. 30

மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது, எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

திருகோணமலை மாவட்ட மற்றும் மூதூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், ச. குகதாசன், மூதூர் பிரதேச சபை தவிசாளர் எஸ். பிரகலாதன், உதவி பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், முப்படை அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மூதூர் பிரதேசத்தின் கடந்த கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்கால நிலையான அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. அத்தோடு, பொது அமைப்புகள், அரச நிறுவனங்கள், பொது மக்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. (எ-04)

# கல்முனை வடக்கு செயலகம் தொடர்பான வழக்கு ஜூலை மாதத்துக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 30

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பான வழக்கு ஜூலை மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

த. கலையரசன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவும் வழக்கின் இடையீட்டு மனுதாரர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ. கலீலுர் ரஹ்மான் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவும் ஆஜராகினர்.

இந்த வழக்கின் இடையீட்டு மனுதாரர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். ஹரீஸ் மற்றும் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் ஆகியோரும் மன்றுக்கு சமுகமளித்திருந்தனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தனது பக்க நியாயங்களை மன்றுக்கு முன்வைத்து வாதிட்டார். அதில், இது உப பிரதேச செயலகமல்ல. 1993ஆம் ஆண்டு முதல் கல்முனை வடக்கு முழுமையான பிரதேச செயலகமாக இயங்கி வந்தது. இந்த செயலகத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிரந்தர கட்டடம் இருப்பதாகவும் 250 இற்கு அதிகமான உத்தியோகத்தர்கள் கடமை செய்கிறார்கள் என்றும் 3 தசாப்தங்களுக்கு மேல் பிரதேச செயலகமாக இந்த செயலகம் இயங்கியதாகவும் கூறினார். சில வருடங்களுக்கு முன்னர் கல்முனை பிரதேச செயலாளர் இந்த செயலகத்தின் அதிகாரங்கள் சிலவற்றை பறித்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்த செயலகத்துக்கு வர்த்தமானி அறிவித்தல் இல்லாது விட்டாலும் நாட்டின் பல இடங்களில் அமைச்சரவை அனுமதியுடன் சில செயலகங்கள் இயங்குகின்றன. இந்த செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக இந்த நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டும் என்று வாதத்தை முன்வைத்தார்.

வழக்கின் முக்கியத்துவம் கருதி எதிர்த்தரப்பு சட்டத்தரணிகளின் வாதத்தையும் நீதிமன்று கேட்டறிந்து இந்த வழக்கின் விசாரணைக்கு முழுநாள் ஒதுக்கவேண்டும் என்பதால் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை 08ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (எ-09)

# மலையக பாடசாலைகளில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

ஹற்றன், ஜன. 30

தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வு மலையக பாடசாலைகளில் சிறப்பாக நடைபெற்றது.

"மகிழ்ச்சி- புன்னகை- அன்புடன்" எனும் தொனிப்பொருளின் கீழ் 2026ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை பாடசாலைகளில் அனுமதிக்கும் நிகழ்வு நேற்று நாடளாவிய ரீதியில் நடைபெற்றது.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முதலாம் தரத்துக்குரிய பாடத்திட்டத்தை இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில், மலையக பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் மாணவர்களை தரம் ஒன்றுக்கு உள்வாங்கும் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது.



அந்தவகையில் ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று மாணவர்களை தரம் ஒன்றுக்கு அனுமதிக்கும் கால்கோள் விழா அதிபர் எஸ். விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஹற்றன் கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசர் ஏ. சிவவதனசுந்தரம் கலந்து கொண்டார்.

புதிதாக வருகை தந்த மாணவர்கள் பாடசாலையின் நுழைவாயிலுக்கு அழைத்து வரப்பட்டதோடு தரம் 02 மாணவர்கள் புதிய மாணவர்களை வரவேற்றனர். (எ)

# காரைதீவில் களைகட்டிய பண்பாட்டு பொங்கல் விழா




காரைதீவு, ஜன. 30

உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு அம்பாறை- காரைதீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் ஜி. அருணன் தலைமையில் பொங்கல் திருவிழா நேற்று முன்தினம் புதன் கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

கலை கலாசார பாரம்பரிய அறுவடை, புதிர் எடுத்தல், நெல்குற்றி புத்தரிசி எடுத்து பொங்கல் வைக்கும் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில், பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் கலந்து கொண்டார்.

உழவர் கண்காட்சி மற்றும் பாடசாலை மாணவர்களால் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பறைசாற்றும் வண்ணம் நடனங்கள் உட்பட பல நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற நிலக்கரி விநியோகம் 2.1 மில்லியன் டொலர் அபராதம்

கொழும்பு, ஜன. 30

நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் இல்லாத நிலக்கரியை விநியோகித்தமைக்காக, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து சுமார் 2.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளதாக லங்கா நிலக்கரி நிறுவனத்தின் பொது முகாமையாளர் நாமல் ஹேவகே தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் நிபுணர்கள் முன்னிலையில் பெறப்பட்ட நிலக்கரி மாதிரிகள், மேலதிக பரிசோதனைக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. அதன் முடிவுகளின் அடிப்படையிலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நிலக்கரி கப்பலில் பெறப்பட்ட மாதிரிகளில் எவ்வித சிக்கலும் இல்லை. தற்போது மூன்றாவது மற்றும் நான்காவது க்கப்பல்களில் இருந்து நிலக்கரி இறக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலக்கரி எரிப்பதால் வெளியாகும் சாம்பலினால் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என நிபுணர்கள் உறுதியளித்துள்ளதாக பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

நிலக்சரி எரிப்பின்போது பறக்கும் சாம்பல் மற்றும் அடிச் சாம்பல் என இரண்டு வகையான சாம்பல் உருவாகிறது.

குறிப்பாக பறக்கும் சாம்பல் எனப்படும் சாம்பலுக்கு சந்தையில் அதிக கேள்வி உள்ளது. இதனை அகற்றுவதற்கு என பிரத்யேக இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தச் சாம்பல் சுற்றுச்சூழலுக்குத் திறந்த நிலையில் விடப்படாமல், உரிய முறையில் நுகர்வோர்களால் கொண்டு செல்லப்படுவதால் சூழல் பாதிப்பு ஏற்படாது என அவர் உறுதியளித்தார். (அ)

## தமிழ்...

தொடர்ந்து கருத்துரைத்த மனோ கணேசன்,

"டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர்களால் நாடு முழுவதும் 643 பேர் உயிரிழந்தனர். 183 பேர் காணாமல் போயினர் என்று அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவித்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகையின் விகிதாசாரத்தில் தோட்ட சமூகங்களை சேர்ந்த மக்களே அதிகளவில் உயிரிழந்தனர். இடம்பெயர்ந்த குடும்பங்கள் இன்னமும் தற்காலிக தங்குமிடங்களில் வாழ்கின்றன. சிலர் பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திரும்ப வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

"இது தற்செயலானது அல்ல. பல தசாப்தங்களாக தொடரும் புறக்கணிப்பு மற்றும் சமமற்ற அணுகுமுறையின் விளைவாகும். இது மலையக தமிழ் சமூகத்தின் மீதான அரசின் அக்கறையற்ற தன்மை மற்றும் பாரபட்சமான அணுகுமுறையை பிரதிபலிக்கிறது. பாதிக்கப்பட்ட தோட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள், பாதுகாப்பான மீள்குடியேற்றம் வழங்க அரசியல் விருப்பம் இல்லாததே முக்கிய பிரச்னை. இது நிவாரணம் மட்டுமல்ல, சம குடியுரிமை - சம பாதுகாப்பு தொடர்பான விடயம் - என்றார்.

மேலும், "பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை எதிர்த்த ஆளும் கட்சி இப்போது மிகவும் கடுமையான பொது பாதுகாப்பு கட்டமைப்பை அறிமுகப்படுத்த முயல்கிறது என்றும் குற்றஞ்சாட்டியதுடன், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அதிகார பகிர்வு காணாமல் போனோர் பற்றிய பணிமனையின் மேம்பட்ட செயல்பாடு போன்றவை தொடர்பாக வடக்கு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட முக்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை" என்றும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## இலங்கை..

தகவலை வெளியிட்டார்.

"சர்வதேச நாணய நிதியம் என்றும் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும். இலங்கையுடனான ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்காகவே எமது குழு இங்கு வந்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அடுத்த மாதம் எமது முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா இலங்கைக்கு வருகை தரவுள்ளார்", என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## கிவுல் ஓயா...

விடுத்துள்ளது.

நேற்றைய தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

"கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான மாபெரும் போராட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நெடுங்கேணியில் நடைபெறும். இதில் சகல மாவட்டங்களிலும் வாழும் மக்கள் திரளாக வந்து பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கிறோம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இந்தப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவதோடு பங்களிப்பையும் தொடர்ச்சியாக வழங்குவோம்."- என்றார். (ஐ)

## அர்ச்சுனா...

தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தல் விடுத்தனர் என்று தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் 3 பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆறு பேரை தெல்லிப்பழை பொலிஸார் டிசெம்பர் 26ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து , தனித்தனியே வாக்குமூலங்களை பதிவு செய்திருந்தனர்.

இது தொடர்பாக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்தனர். இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, குற்றஞ்சாட்டப்பட்ட ஆறு பேரும் மன்றில் முற்பட்டனர்.

விசாரணைகளை தொடர்ந்து 6 பேரையும் பிணையில் விடுவித்த நீதிவான், வழக்கை எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்கு மறுதவணையிட்டு உத்தரவிட்டார். (ஐ-03-05)

## மாகாண...

நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தமிழ் மக்களின் உரிமையை நோக்கிச்சென்ற இலங்கை தமிழ் அரசு கட்சி இன்று பதவி ஆசைக்கும் கதிரைப் போட்டிக்குமான கட்சியாக மாறியுள்ளது. பாராளுமன்ற குழுத்தலைவர் சிறீதரனுக்கு எதிராக தங்களது கட்சிக்குள்ளே குழப்ப நிலையை ஏற்படுத்தி, அவர் அரசமைப்பு பேரவையிலிருந்து விலகவேண்டும் என்ற விடயம் முன்னெடுக்கப்படுகிறது. பாராளுமன்ற குழுக்களின் தலைவர் பதவியிலிருந்தும் அவரை விலக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

"இவர்களின் உட்கட்சி பூசல் என்பது தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளது. இவர்களுக்கு பின்னால் தமிழ் மக்கள் அணி திரள்வார்களா என்ற சந்தேகம் இன்று எழுந்துள்ளது. ஏனைய கட்சிகள் தங்களுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை மறந்து ஒன்றுபடும்போது தமிழ் அரசுக் கட்சியில் அடிப்படும் நிலைமையை காணக்கூடியதாகவுள்ளது.

"இன்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவுத் தளம் அதிகரித்து வருகிறது. மாகாண சபைகள் தேர்தல் தற்போது, வடக்கு மாகாண மக்கள் தேசிய மக்கள் சக்தியையும் ஜனாதிபதியையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்துள்ளனர். இன, மத வேறுபாடுகள் கடந்து தேசிய மக்கள் சக்தியுடன் பயணித்து வருகின்றனர். இந்நிலையில், புதிய அரசமைப்பு தொடர்பாக தேர்தல் காலங்களில் வாக்குறுதி வழங்கியிருந்தோம். இது தொடர்பான முன்னெடுப்புகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. விரைவில் புதிய அரசமைப்பு, மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" - என்றார். (ஐ)

## தொடரும்...

பொது சுகாதார சேவையை நம்பியிருந்த பல ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்வுகளை சுகாதார அமைச்சகம் செயல்படுத்தத் தவறியமையால் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மருத்துவர்கள் தங்கள் குறைகளை தீர்ப்பதற்கான பேச்சில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டவில்லை. பேச்சுக்காக அமைச்சின் கதவுகள் திறந்தே உள்ளன", - என்று சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார். (ஐ)

## 100...

ஹசரலி பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "மாற்றங்கள் மூலம் இணைவோம்" என்பதே இந்த ஆண்டு உலக புற்றுநோய் தினத்தின் கருப்பொருளாகும். உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2022ஆம் ஆண்டில் உலகில் 2 கோடி புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர். புற்றுநோய் தொடர்பான மரணங்களின் எண்ணிக்கை ஒரு கோடியாக உள்ளது.

2022ஆம் ஆண்டில் நாட்டில் 35 ஆயிரத்து 855 புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகினர். 2021ஆம் ஆண்டில் புற்றுநோய்யால் 14 ஆயிரத்து 986 மரணங்கள் பதிவாகின. புதிதாக பதிவான புற்றுநோயாளர்களில் சுமார் 19 ஆயிரத்து 500 பெண்கள், 16 ஆயிரத்து 400 பேர் ஆண்களாவர் - என்றும் கூறினார். (ஐ)

## மின் வேலியில்...

4 பிள்ளைகளின் தமிழ்ச்செல்வி செல்வகுமார் (வயது 43) ஆகியோரே உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருபவை வருமாறு,

உயிரிழந்த பெண்ணும் உயிரிழந்தவரின் மனைவியும் மீன் வாங்குவதற்காக புலையவெளி ஆற்றுக்கு சென்றபோது வயல் பகுதியில் நில மட்டத்தில் யானைக்காக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கினர். இதன்போது, மின்சாரத்தால் தாக்குண்டதில் உயிரிழந்த பெண் தண்ணீரிலும் மற்றைய பெண் நிலப் பகுதியிலும் விழுந்தனர்.

தண்ணீரில் விழுந்த பெண்ணை காப்பாற்றுவதற்காக நிலப் பகுதியில் விழுந்த பெண் தனது கணவரை அழைத்துள்ளார். அவரும் தண்ணீருக்குள் இறங்க முயன்றபோது மின்சாரம் தாக்கியது. அங்கு வந்த அயலவர்கள் மின்சார வேலிக்கு வழங்கிய மின்சாரத்தை துண்டித்து இருவரையும் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எனினும், வழியிலேயே இருவரும் உயிரிழந்தனர்.

இருவரின் சடலங்களும் செங்கலடி பிரதேச மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன. கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ரூ.1750...

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தைத் தொடர்ந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளத்தை ஆயிரத்து 750 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதில், அடிப்படை சம்பளத்தை ஆயிரத்து 350 ரூபாயிலிருந்து ஆயிரத்து 550 ரூபாயாக அதிகரிப்பதற்கும், வருகைக்கான கொடுப்பனவாக 200 ரூபாயை அரசாங்கம் செலுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது. இந்த சம்பள அதிகரிப்புக்காக வரவு - செலவுத் திட்டத்தில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மகள்...

அவரின் சடலம்மீதான மரண விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## பளை...

செல்வவதி (வயது 63) என்பவரே உயிரிழந்தார்.

பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து பளை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணே உயிரிழந்தார்.

டிப்பர் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஆடை...

மாதத்தை விட 23.03 மில்லியன் டொலர்களால் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

இதற்கு பிரதானமாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து கிடைத்த கேள்வியின் அதிகரிப்பே காரணம் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

இந்தக் கேள்வி அதிகரிப்புடன் டிசெம்பர் மாதத்தில் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ள இலங்கையினால் முடிந்துள்ளதாக ஆடை சங்கங்களின் சம்மேளனம் வெளியிட்டுள்ள தரவுகளுக்கு அமைய சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2024 டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2025 டிசெம்பர் மாதத்தில் அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 6.49 வீதத்தால் அதிகரித்துள்ளதுடன் அது 178.29 மில்லியன் டொலர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் 6.76 வீதத்தால் வளர்ச்சியடைந்து 141 மில்லியன் டொலர்களாகவும், ஐக்கிய இராச்சியத்துக்கான ஏற்றுமதிகள் 12.95 வீதத்தால் அதிகரித்து 55.12 மில்லியன் டொலர் வருமானமாகவும் பதிவாகியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையிலும் பாடசாலை மாணவர்கள் சமூக ஊடகங்களை அணுகக் கட்டுப்பாடு!

## அவதானம் செலுத்துகின்றது அரசு

கொழும்பு, ஜன. 30

12 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குச் சமூக ஊடகங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஏற்கனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் கைபேசிப் பயன்பாட்டை முழுமையாக நிறுத்த வேண்டும் என அரசாங்கம் ஏற்கனவே முன்மொழிந்துள்ள நிலையில், அதற்கு இணையாக சமூக ஊடகப் பயன்பாட்டையும் தடை செய்வது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகள் பாடசாலை மாணவர்களுக்குச் சமூக ஊடகப் பயன்பாட்டைத் தடை செய்ய சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், அது தொடர்பிலும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் குறிப்பிட்டார்.

பிள்ளைகள் இணையத்துடன் இணைவதன் மூலம் இடம்பெறும் பல்வேறு ஒழுக்கக்கேடான சம்பவங்கள் அதிகரித்து வருவதால், சமூக ஊடகங்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு எதிரான சைபர் குற்றங்களைக் கையாள்வதற்காகப் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குக் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் சிறுவர்கள் தொடர்பான 10,455 முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைத்துள்ளன.

அவற்றில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் 8,514 முறைப்பாடுகளும், அதன் நேரடி எல்லைக்குள் வராத 1,941 முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

கடந்த ஆண்டு கிடைத்த முறைப்பாடுகளில்:

பாலியல் துன்புறுத்தல்-545 முறைப்பாடுகள்.

பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்-231 முறைப்பாடுகள்.

இளம் வயதுக் கர்ப்பம்-79 சம்பவங்கள்.

கருக்கலைப்பு-03 சம்பவங்கள்.

சிறுவர் திருமணம்- 09 சம்பவங்கள்.

பாலியல் வல்லுறவு-38 முறைப்பாடுகள்.

சிறுவர்களுக்கு எதிரான சைபர் வன்முறை-150 முறைப்பாடுகள்.

தற்கொலை முயற்சி-20 முறைப்பாடுகள்.

இவை தவிர, பிறப்புச் சான்றிதழ் இல்லாத பிள்ளைகள் தொடர்பாக 42 முறைப்பாடுகளும், 5 வயதுக் குட்பட்ட பிள்ளைகளைக் கைவிட்டுவிட்டுப் பெற்றோர் வெளிநாடு சென்றமை தொடர்பாக 9 முறைப்பாடுகளும் கடந்த ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ளன.

(அ)

# அருட்தந்தை மீது தாக்குதல் 6 அதிகாரிகளுக்கும் பிணை

கொழும்பு, ஜன. 30

கத்தோலிக்க அருட்தந்தை ஒருவரை தாக்கிய சம்பவத்தில் கைது செய்யப்பட்டிருந்த ஆறு பொலிஸ் அதிகாரிகளும் நேற்று கம்பஹா நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் அறுவரும் தலா ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிகளுக்கு வெளிநாடுகளுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் பணி இடைநீக்கமும் நீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் அடையாளம் காணப்பட்ட மூன்று அதிகாரிகளுள் ஒருவரே தன்னைத் தாக்கியதாகவும் ஏனைய இருவரும் அத் தருணத்தில் அருகில் நின்றவர்கள் எனவும் அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# போலி மின்விசிறிகள் விற்பனை!

கொழும்பு, ஜன. 30

ஜப்பானிய வர்த்தக பெயர்கள் மீதான நுகர்வோரின் நம்பிக்கையைப் பயன்படுத்தி, போலி மின்விசிறிகளை விற்பனை செய்து வந்த வர்த்தகர் ஒருவரை நுகர்வோர் விவகார அதிகாரசபை கைது செய்துள்ளது.

பிலியந்தலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனையின் போது, அந்த மின்விசிறிகளில் முறையான இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர் பற்றிய எந்தவொரு தகவலும் இல்லை என்பது கண்டறியப்பட்டது.

இது தொடர்பான வழக்கு கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குறித்த தொழிலதிபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

சாட்சியங்களாக சமர்ப்பிக்கப்பட்ட 20 மின்விசிறிகளையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிமன்றம், அவருக்கு 40,000 ரூபாய் அபராதம் விதித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான மோசடிகளில் சிக்காமல் இருக்க நுகர்வோர் எச்சரிக்கையுடன் இருக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# ஜனவரியில் 6 துப்பாக்கிச்சூடுகள்!

கொழும்பு, ஜன. 30

2026 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 6 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூடுகளில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 4 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த துப்பாக்கிச் சூடுகளில் பெரும்பாலானவை பாதாள உலக குழுக்களுக்கிடையிலான தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

# நாமலுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் ஜூலையில்

கொழும்பு, ஜன. 30

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான முறைப்பாட்டின் அடுத்த விசாரணையை ஜூலை 30ஆம் திகதி நடத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு பிரதம நீதிவான் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

நேற்றைய விசாரணைக்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் மற்றும் மேலும் மூன்று சந்தேக நபர்களும் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையின்போது, வழக்கு தொடர்பான சட்ட ஆலோசனை இன்னும் பெறப்படவில்லை என குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்ததையடுத்தே, விசாரணை ஜூலை 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த நீதிமன்ற விசாரணைக்குள் சட்ட ஆலோசனையின் நிலை குறித்து நீதிமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டார். (அ)

# கல்விச் சீர்திருத்தம் என்ற பெயரில் நாட்டைச் சீரழிக்கிறது அரசாங்கம்!

## தேசிய ஆசிரியர் இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 30

அரசாங்கம் முன்னெடுத்து வரும் புதிய கல்வி சீர்திருத்தங்கள் மாணவர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக தேசிய ஆசிரியர் இயக்கம் குற்றம்சாட்டியுள்ளது. இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அதன் பொதுச் செயலாளர் சதுன் பண்டார- முதலாம் தரத்திற்கான கல்வி சீர்திருத்தங்கள் இன்று முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதற்கான ஆசிரியர் வழிகாட்டி கையேடுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

50 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகளை மூடி, மாணவர்களைப் பெரிய பாடசாலைகளுக்கு மாற்றும் அரசின் திட்டம் நடைமுறை சிக்கல்களைக் கொண்டதாகவும், ஏற்கனவே அதிக மாணவர்கள் கொண்ட பாடசாலைகளில் போதிய வசதிகள் இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார். கல்வியைத் தன்னிச்சையாக டிஜிற்றல் மயமாக்குவது மாணவர்களின் கற்றல் திறனை பாதிக்கும் என்றும், மேலைநாடுகள் கைபேசி பயன்பாட்டைத் தடை செய்து வரும் நிலையில் இலங்கை அதற்கு மாறாகச் செயல்படுவது ஆபத்தானது என்றும் கூறினார்.

பாடப்புத்தகப் பாரத்தை குறைப்பதாகக் கூறி முக்கிய கல்வி உள்ளடக்கங்களை நீக்கும் முயற்சிகளுக்கும் அவர் எதிர்ப்பு தெரிவித்தார். (அ)

# நிபா வைரஸ் குறித்து இலங்கையும் கவனம்!

கொழும்பு, ஜன. 30

இந்தியாவில் பரவி வரும் நிபா வைரஸ் குறித்து இலங்கை மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த வைரஸ் தொடர்பாக சுகாதாரப் பிரிவினர் தீவிர அவதானம் செலுத்தியுள்ளனர்.

நிபா என அழைக்கப்படும் இந்த வைரஸ் ஆசிய பிராந்தியம் ஊடாக பரவக்கூடும் என தெரியவந்துள்ள நிலையில், ஆசிய பிராந்தியத்தின் பல நாடுகள் இது குறித்து அதிக கவனம் செலுத்தியுள்ளன.

தாய்லாந்து, சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் அதிகாரிகள் இது தொடர்பாக விமான நிலையப் பரிசோதனைகளையும் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது வௌவால்கள் மற்றும் பன்றிகள் போன்ற விலங்குகளிடமிருந்து தொற்றும் ஒரு வைரஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இதன் இறப்பு விகிதம் 40 வீதம் முதல் 75 வீதம் வரை இருப்பதாகக் கூறப்படுகிறது.

நிபா வைரஸ் மனிதரிடமிருந்து மனிதருக்குப் பரவக்கூடியது என்றாலும், அதன் கடத்தல் மிகக் குறைந்த அளவிலேயே இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய பிராந்திய நாடுகளைப் போன்றே இலங்கையும் இந்த வைரஸ் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளதுடன், இது குறித்து எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை-என்றார். (அ)

# தனியார்துறையினரை மட்டும் நம்பாமல் அரசு வலுவான முதலீட்டாளராகவேண்டும்

## அமைச்சர் லால் காந்த சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 30

தனியார் துறையை மட்டும் நம்பியிராமல், அரசாங்கம் ஒரு வலுவானமுதலீட்டாளராக பொருளாதாரத்தில் நேரடி பங்கு வகிக்க வேண்டும் என விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார். 2027ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிக்கும் விசேட ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், 2025ஆம் ஆண்டில் அமைச்சு 64 வீத பௌதீக முன்னேற்றத்தையும் 61 வீத நிதி முன்னேற்றத்தையும் எட்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

மில்கோ நிறுவனம் இலாப நிலையை அடைந்துள்ளதுடன், ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த கட்டமாக பால் வழங்கும் பண்ணையாளர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

1977 இற்குப் பின்னர் அரசை பொருளாதாரத்திலிருந்து விலக்கி வைத்த நவதாராளவாத கொள்கையை மாற்றியமைத்து, அரசின் பங்கினை விரிவுபடுத்தி வருவதாக அவர் கூறினார். எதிர்வரும் 2027 வரவு-செலவுத் திட்டத்தில் அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதியின் குறைந்தது 90 வீத மக்கள் நலத் திட்டங்களுக்கு செலவிடப்படவேண்டும் என்றும், இதன் மூலம் விவசாய மற்றும் கால்நடைத் துறையில் பெரிய மாற்றம் ஏற்படுத்த முடியும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.